# ADM COURT, SANKARANKOVIL

**தேதி: 25-07-2022**

**அசல் வழக்கு எண்.154/2013**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது. தாவா சொத்து ஆதிதிராவிட நலத்துறையில் இருந்து என் தந்தைக்கு கொடுக்கப்பட்டசொத்து. மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தாவா சொத்து என் தந்தைக்கு கொடுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரை இவ்வழக்கில் நான் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.தாவா சொத்திற்கு நகராட்சி மூலமாக கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு நல்ல குடிநீர் இணைப்புதான் என்றால் சரிதான். தாவா சொத்து மேற்குபுறமும், என்னுடைய வீடு கிழக்குபுறமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு குடிநீர்இணைப்பு கோரி நான் நகராட்சியில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் மனு தாக்கல் செய்தபோது என்னுடைய வீட்டு வரி ரசீதை இணைத்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மனு தாக்கல் செய்தபோது நான் தாக்கல் செய்த மனுவில் தவறு இருக்கும்பட்சத்தில் குடிநீர்இணைப்பை துண்டித்து கொள்ள ஒப்புகொள்ள வைத்து நோட்டரி உறுதி மொழி பத்திரம் நகராட்சியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. என் வீட்டிற்கு மேற்கு புறம் உள்ள தாவா சொத்தில் உள்ள குடிநீர் இணைப்பை துண்டிக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில்

1,2 பிரதிவாதிகள் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு வழங்கிய குடிநீர் இணைப்பை துண்டிக்ககோரிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள குடிநீர் இணைப்பு என் வீட்டிலிருந்துதான் செல்கிறது என்பதை நிரூபிக்க நீதிமன்றம் மூலம் ஆணையரை நியமிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு 1,2 பிரதிவாதிகள் வீட்டு வரி பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்திலுள்ள வீட்டிற்கான வீட்டு வரி ரசீதுகள் 4 ம் பிரதிவாதியிடம் தாக்கல் செய்துதான் குடிநீர் இணைப்பு பெற்றார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பபட்டது அதில் உள்ள குடிநீர் இணைப்பை இந்த 4 ம் பிரதிவாதி துண்டிக்க அவசியம் இல்்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு சம்பந்தமாக நான் 4 ம் பிரதிவாதியிடம் ஆட்சேபனை மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஆட்சேபனை மனு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு 4 ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**3 மற்றும் 5 பிரதிவாதிகள் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**